22.02.2024, OS.NO.284/2021, P.W.1 – அகமது மீரா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் மகனின் திருமணம் 2004ம் ஆண்டு நடந்தது. அந்த திருமணத்தில் என் அப்பா கலந்து கொண்டார். சென்னையில் உள்ள என் சகோதரியின் மகனுக்கு திருமணம் அதற்கு அடுத்த ஆண்டு நடந்தது. அந்த திருமணத்தில் என் அப்பா கலந்து கொண்டார் என்றால் கைதாங்கலாக தூக்கி வைத்தார்கள். 04.11.2005ம்தேதியில் என் அப்பா, 6 வது பிரதிவாதியை பார்க்க மேலபாளையம் வீட்டிற்கு வந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 08.06.2005ம்தேதி அன்சாரி திருமணம் சென்னையில் நடந்தபோது என் அப்பா கலந்து கொண்டார் என்றால் கைதாங்கலாக அழைத்து வந்தார்கள். 04.11.2005ம்தேதி ஹதர் அலியின் மகனின் பெயர் சூட்டு விழாவிற்கு மேலபாளையத்தில் என் அப்பா கலந்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் எழுதும் காலத்திலும், அதன் பின்னரும் என் அப்பா நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றால் சரியல்ல. ஹமீர்பாத்து மகள் திருமணத்திற்கு 2 முதல் 6 பிரதிவாதிகளை அழைத்தார்கள். 2ம் பிரதிவாதியும், என் கணவரும் நல்ல முறையில் பழகி வந்தார்கள் என்றால் இருந்து இருப்பார்கள். 2ம் பிரதிவாதியின் கடையில் என் கணவர் எப்போதும் இருப்பார் என்றால் இருந்திருக்கலாம். 2005ம் ஆண்டிற்கு பின்னர் என் அப்பாவின் சொத்தில் பங்கு வேண்டும் என்று என் அண்ணனிடம் கேட்டேன். 2ம் பிரதிவாதி புதுபித்த வீட்டிற்கு பால்காய்ச்சும் விழாவிற்கு நான் போனேனா என்றால் அழைக்கவில்லை, போகவில்லை. 2011ம் ஆண்டு நடந்த 2ம் பிரதிவாதியின் மகன் திருமணத்தில் நான் கலந்து கொண்டேன். என் அப்பாவிற்கும், அவருடைய சகோதரிக்கும் 1965ல் நடந்த பாகத்தில் என் அப்பாவிற்கு 21 அயிட்ட சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரிதான். பிராதில் முதல் இலக்கத்தில் 10 இலக்க சொத்துக்களை கூறியுள்ளேன் என்றால் சரிதான். மீதியுள்ள வயல்களை குடும்ப நன்மைக்காக என் அப்பா விற்று விட்டார் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு என் அம்மா சொத்து ஏதாவது கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்திருப்பார், எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 7, 8 பிரதிவாதிகளோடு வழக்கு தாக்கல் செய்ய கலந்து ஆலோசிக்கவில்லை. 7 பிரதிவாதி இந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார்

என்ற விபரம் தெரியாது. 2ம் பிரதிவாதி அவருக்கு செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை ரூ.20 லட்சம் செலவு செய்து பராமரிப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வீட்டில் என் தாயாரான 1ம் பிரதிவாதி இருப்பதை நான் நேரில் பார்த்து விசாரித்து வருவேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியிடம் அவர் இருக்கும் வீடு உனக்கு எப்படி கிடைத்தது என்று நான் கேட்கவில்லை. 3 மகள்களை நல்ல முறையில் திருமணம் செய்து வைத்து விட்டதால் வறுமை நிலையில் இருக்கும் மகன்கள் மீது உள்ள பாசத்தினால் அவருக்கு பாத்தியபட்ட சொத்துக்களை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் மகன்களுக்கு பாத்தியபடுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகள் செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. என் கணவரிடம் 2ம் பிரதிவாதி வீட்டை அபிவிருத்தி செய்ய ரூ.6 லட்சம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பணத்தை திரும்பி கொடுப்பதற்காக 2ம் பிரதிவாதி ஒரு வயலை விற்கும்போது அதில் என் கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்து ஒரு வருடம், 6 மாதம் ஆகிறது. வழக்கு தாக்கல் செய்ய எல்லா நடவடிக்கைகளும் என்கணவர் எடுத்தார் என்றால் ஒரு புரோக்கரிடம் சொல்லி ஈசி போட்டு பார்த்து நடவடிக்கை எடுத்தார். அந்த புரோக்கர் பெயர் அலிஉசேன். புரோக்கர் மூலம் ஈசி போட்டு பார்த்ததாக பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. நான் பிராதில் கோரியுள்ள 7/104 பங்கு எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. ஒரே நாளில் பல பத்திரங்களை பிரதிவாதிகள் எழுதி கூட்டு சதி செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் எந்த காலத்திலும் சொத்தில் பங்கு கொடுங்கள் என்று கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் தூண்டுதலின்பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 23.12.2005 ம்தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண விபரம் எனக்கு தெரிந்து இருந்தும் உரிய கால வரையறைக்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் சட்டப்படி சொத்து பாத்தியபட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் காலாவதியாகி விட்டது என்றால் சரியல்ல. என் அம்மா பால்வியாபாரம் செய்து நல்ல வசதியாக இருந்தார் என்றும், அந்த வருமானத்தை வைத்து சொத்துக்களை

வாங்கி மகன்களுக்கு சொத்துக்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை என் சகோதரர்கள் நஞ்சையில் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் 12.03.2021 ம்தேதி நாளிதழில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் பிராது 1வது இலக்க சொத்துக்களை மட்டும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 17.01.2021 ம்தேதி தான் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி விபரம் தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2 முறை ஹஜ் பயணம் செய்து வந்துள்ளேன். நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க கூடியது அல்ல என்றும், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.